

Toronto Seniors Housing Corporation

# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

**உங்கள் கட்டிடம் புதிதாக வந்துள்ள ரொறொன்ரோ முதியோர் வீட்டுவசதி வாரியத்தின் கீழ், அதன் ஒரு பகுதியாக 2022 ஜூன் மாதம் 1ஆம் திகதி புதன்கிழமையன்று மாறவுள்ளது. இந்த மாற்றம் சீராகவும் படிப்படியாகவும் அமையும்படி நாம் திட்டமிட்டு இருக்கிறோம்.**

## 2022 ஜூன் மாதம் 1ஆம் திகதி எவை மாறுகின்றன

**கட்டிடச் செயற்பாடுகள்:** *ரொறொன்ரோ முதியோர் வீட்டுவசதி வாரியம் (Toronto Seniors Housing Corporation) கட்டிடத்துக்கான நடாத்துமுறைப் பணிகளை நிறைவேற்றி, சேவைகளை வழங்கி, வாடகைக் குடியிருப்பாளர்களுக்கான ஆதார உதவிகளையும் செய்யும்.*

**உதவித் தொலைபேசி இணைப்பு:** *வாடகைக் குடியிருப்பாளர்களுக்கு பேணும் முறையிலான திருத்த வேலை அல்லது தகவல் எதுவும் தேவைப்படுகையில் அவர்கள் 416-945-0800 என்ற தொலைபேசி இலக்கத்தில் குடியிருப்பாளர்ஆதார உதவி நிலையத்தினை (Tenant Support Centre) அழைப்பர். இந்த வசதி ஒரு வாரத்தின் ஏழு நாட்கள் 24 மணி நேரமும் கிடைக்கக் கூடியதாக இருக்கும்.*

## 2022 ஜூன் மாதம் 1ஆம் திகதி எவை மாறவில்லை

**வாடகை செலுத்தும் ஏற்பாடு:** *நீங்கள் தொடர்ந்து உங்கள் வீட்டு வாடகைத் தொகையினை ரொறொன்ரோ சமூக வீட்டுவசதி வாரியத்துக்கு (Toronto Community Housing) செலுத்துவீர்கள். நீங்கள் உங்கள் வீட்டு வாடகைத் தொகையினை செலுத்தும் வழிமுறையும் முன்பு போன்றே இருக்கும். வாடகை செலுத்தும் நாளும் இனிமேல் மாதத்தின் முதல் திகதியாகவே இருக்கும்.*

**பணியாளர்கள்:** *உங்கள் கட்டிடத்தில் வேலை செய்யும் பணியாளர்கள் அதே நபர்களாகவே தொடர்ந்தும் இருப்பர். உங்கள் அன்றாட தேவைகளை அவர்கள் கவனித்துக் கொள்ளுவர். நீங்கள் முதலில் தொடர்பு கொள்ளும் ஆட்களாகவும் அவர்கள் இருப்பர்.*

**கட்டிட திருத்த வேலைகள்:** *ரொறொன்ரோ சமூக வீட்டுவசதி வாரியம்(Toronto Community Housing) கட்டிடத்தின் உரிமையாளராகத் தொடர்ந்து இருக்கும். கட்டிடத்துக்கு வேண்டிய பாரிய திருத்த வேலைகள் அல்லது புதிதாக அமைக்கும் பணிகளை ரொறொன்ரோ சமூக வீட்டு வசதி வாரியம் நிறைவேற்றும்.*

மேலதிக தகவல் பெறுவதற்கு:

416-945-0800

support@torontoseniorshousing.ca

torontoseniorshousing.ca

Tamil version